Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.433/2020

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சிவன்ராஜ் | Occupation | வியாபாரம் |
| Father's name | பாதமுத்து | Calling | |
| Village | பெருமாள்பட்டி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of July 2026.

08.07.2026

2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாள்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 30.08.2019 அன்று எப்போதும்போல் அசா.1ன் கடைக்கு நான் டீ குடிக்க சென்றபோது அவரது கடை முன்பு கூட்டமாக இருந்தது. நான் என்னவென்று சென்று விசாரித்தபோது அசா.1ன் சித்தப்பா கோவிந்தராஜ் அவரது கடையிலிருந்தார். அசா.1ன் சித்தப்பா கணேஷ்வேல் மற்றும் மாரீஸ்வரன் என்பவர் அசா.1 ஐ கட்டையால் அடித்துவிட்டதாக என்னிடம் கூறினார். அசா.1 மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக என்னிடம் கூறினார். அவர்களை பிடிக்க முயற்சித்ததாகவும் ஆனால் பிடிக்க முடியவில்லை என்றும் கூறினார். அசா.1ன் கடைக்கு முன்பு மரச்சக்கை உடைந்து கிடந்தது. அப்போது போலீசார் ஒருவர் பார்வையிட்டுக்கொண்டிருந்தார் என்னை பற்றி விசாரித்தார். போலீசார் என்னிடம் கையெழுத்து எதுவும் பெறவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

கடந்த 30.08.2019 அன்று மதியம் 01.30 மணியளவில் நானும் பரமசிவம் என்பவரும் திருவில்லிபுத்தூர் ராமகிருஷ்ணாபுரம் காமராஜர் சிலைக்கு எதிரிலுள்ள ரோட்டில் முக்கிலுள்ள Bank of India ATM அருகே நின்றுகொண்டிருந்தபோது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் மேற்படி காவல்நிலைய குற்ற எண் சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும் பரமசிவமும் சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளதாகவும் போலீசார் விசாரணையில்கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.433/2020

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பன்னீர்செல்வம் | Occupation | வியாபாரம் |
| Father's name | சிவன் | Calling | |
| Village | ஆலடிப்பட்டி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of July 2026.

08.07.2026

2ம் எதிரி ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலடிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 எனது அப்பாவின் அண்ணன் மகன் ஆவார். அவரை தாக்கிவிட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். நான் உடனே சென்று பார்த்தபோது அசா,1 ரத்தக்காயத்துடன் நின்றுகொண்டிருந்தார். அசா.1ன் மனைவியிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது 3 பேர் அசா.1 ஐ தாக்கிவிட்டதாகவும் அதனால் மருத்துவமனைக்கு செல்வதாகவும் கூறினார். பின்னர் நான் எனது கடைக்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். **அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து மட்டும் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

கடந்த 30.08.2019 அன்று மாலை 05.00 மணியளவில் நானும் ஸ்ரீவேலவன் என்பவரும் திருவில்லிபுத்தூர் டு திருவண்ணாமலை ரோட்டில் ரேவதி தியேட்டர் அருகில் சென்றுகொண்டிருந்தபோது சார்பு ஆய்வாளர் எங்கள் தெருவை சேர்ந்த ஆஜர் எதிரி மற்றும் மாரீஸ்வரன் என்பவர்கள் வைத்திருந்த TN 84 H 3547 என்ற எண் கொண்ட Hero Honda Splendo Plus இருசக்கர வாகனத்தை பிடித்து வைத்திருந்ததாகவும் அந்த வழியாக சென்ற எங்களை அழைத்து குற்ற எண்.415/2019 வழக்கு சம்மந்தமாக அவர்களை கைது செய்துள்ளதாகவும் எங்கள் முன்னிலையில் மேற்படி வாகனத்தை அத்தாட்சியில் கைப்பற்றுவதாகவும் கூறியதாகவும் மேற்படி அத்தாட்சியில் நானும் ஸ்ரீவேலவனும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.